ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்**

19.12.2024

1. ஞான பண்டிதனே செந்தூர் வேலா
ஞானிகள் பூசை செய்து கொண்டு
தானதருமம் காத்து வருகின்ற
தவராஜன் என் மக்கள் நலம்பெற

2. நலம்பெற குருவார அருளாசியாக
ஞாலமதில் குரோதி சிலை திங்கள்
வளம்பெற முதல் குருவார ஆசியாக
வழங்குவேன் அரங்கமகா ஞானியர் யானும்

3. யானுரைக்க பிரணவக் குடிலே
உலகை காக்கும் சபையாக இருக்க
ஞான உபதேசங்கள் ஏற்று
ஞானிகள் பூசை கலந்து மக்கள்

4. மக்கள் எல்லாம் குடிலுக்கு வர
மரணம் வெல்லும் சக்தி பெற்று
ஆக்கமுடன் சர்வபலமும் அடைவர்
அரங்கன் யான் சோதியாய் கலந்து

5. கலந்துமே வரங்கள் பல தர
காப்பாய் என வேண்டி வர
வலம் வந்து அருளமுது உண்டு
வணங்கிப் பொருளுதவி தருமவழி

6. தருமவழி செய்து வருகவே
தானதரும பலமுடன் தவசி என்
வரங்கள் பலவும் அடைந்துமே
வாழும் காலமே சூட்சுமம் பல அறிந்து

7. அறிந்து தெளிந்து ஞானிகளாகவே
ஆவதற்கான மகத்துவமும் பெறுவர்
தெரிந்து ஞான தேசிகன் வழியே
தெய்வீக உயர் வழியாக இருக்க

8. இருக்கவே நாம செபங்களுடன்
இனிதே அனுதினமும் பூசை
கருத்தாக மக்கள் செய்து கொண்டு
கட்டாயம் சைவநெறி ஏற்று

9. ஏற்றுமே அரங்கன் என் தருமத்தை
எல்லாத் திக்கிலும் செய்துமே
ஆற்றலாகத் தருமபலம் தன்னை
அகிலம் எங்கிலும் பெருக்கிட

10. பெருக்கிட கலியின் இடர்கள்
பேரிடர் பிரளயம் போன்ற இன்னல்
வருத்தா உலகினில் அணுகிடா
வையகம் பெரும் பாதுகாப்புமிக்க

11. மிக்கநல் ஞான பூமியாக
மேலான வேலவன் ஆளுகின்ற
ஆக்கமுள ஞான ஆட்சி காலமுமாக
அகிலம் மாற்றம் காண்கும் அரங்கனென் அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி